# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 19 | 4 Pages | 20.08.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 19 | 4 பக்கங்கள் | 20.08.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சு



புதுடெல்லி, ஆக. 20

தென்ஆப்பிரிக்காவில் பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெற உள்ளது. அப்போது இருவரும் நேரில் சந்தித்து பேசுவது குறித்து ஆலோசித்தனர்.

ஈரான்நாட்டின்அதிபர்இப்ராஹிம்ரைசியுடன்பிரதமர்நரேந்திரமோடி நேற்று தொலைபேசியில் பேசினார். இருநாடுகளின் உறவை மேலும் வலுப்படுத்துவது மற்றும் பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து இருவரும் விவாதித்தனர். இருநாடுகளின் இணைப்பு பாலமாக அறியப்படும் ஈரானின் சபஹர் துறைமுகத்தின் முழு திறனையும் அதிகரிப்பது உள்பட இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இருதலைவர்களும் தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர். இந்தியாஈரான் இடையிலான உறவு இருநாட்டு மக்களிடையேயான வலுவான தொடர்பு உள்பட நெருங்கிய வரலாற்று மற்றும் நாகரீக தொடர்புகளால் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை பிரதமர் மோடி இப்ராஹிம் ரைசியிடம் எடுத்துரைத்தார். தொடர்ந்து, பிரிக்ஸ் அமைப்பை விரிவுபடுத்துவது உள்பட சர்வதேச மன்றங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை பேணுவது குறித்து விவாதித்த இருநாட்டு தலைவர்களும், விரைவில் தென்ஆப்பிரிக்காவில் நடைபெற இருக்கும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டின்போது இருவரும் நேரில் சந்தித்துப் பேசுவது குறித்து ஆலோசித்தனர் என மத்திய அரசு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

## இமாச்சல பிரதேசம் பேரிடர் பாதித்த மாநிலமாக அறிவிப்பு



சிம்லா, ஆக. 20

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இமாசலில் மேகவெடிப்பு ஏற்பட்டு பேய்மழை கொட்டி வருகிறது. இமாச்சல் முழுவதையும் இயற்கை பேரிடர் பாதித்த மாநிலமாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழையால் இமாச்சல பிரதேசம் அதிகபட்ச மழைப்பொழிவை பெற்றுள்ளது. இதனால் கடும் வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டு மோசமான பாதிப்புகளையும் எதிர்கொண்டு உள்ளது. அங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மேகவெடிப்பு ஏற்பட்டு பேய்மழை கொட்டி வருகிறது. கடந்த 3 நாட்களில் மட்டும் இயல்பைவிட 157 சதவீதம் அதிகம் மழை பெய்துள்ளது. மழை மற்றும் நிலச்சரிவு காரணமாக இதுவரை ஆயிரக்கணக்கான வீடுகள், அரசு மற்றும் தனியார் சொத்துக்கள் அழிந்துள்ளது. அத்துடன் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து அங்கு மீட்புப்பணிகள் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில், இமாச்சலபிரதேசம்முழுவதையும் இயற்கை பேரிடர் பாதித்த மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## உண்மை எது: மதச்சாயம் பூசப்பட்டு தவறாக பகிரப்பட்ட உ.பி. வீடியோ



உத்திரபிரதேசம், ஆக. 20

சமீபத்தில் வைரலான ஒரு வீடியோவில் உத்தர பிரதேசத்திலுள்ள ஹர்டோய் பகுதியில், ரெயில் தண்டவாளத்திற்கு அருகே ஒரு மனிதரை பல ஆண்கள் சேர்ந்து தாக்கும் காட்சிகள் இருந்தன. இதனை பகிர்ந்தவர்களில் ஒரு பயனர் பகிரும்போது அவ்வீடியோவுடன், "ரெயில்வே கேட் காவலாளியை ஜிஹாதிகள் தாக்குகிறார்கள். அதை வீடியோவாக எடுத்து சமூக வலைதளங்களில் அவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்." என குறிப்பிட்டு ஒரு குறுஞ்செய்தியும் அத்துடன் இணைத்திருந்தார். ஆனால், விசாரணையில் அந்த வீடியோவில் உள்ள சம்பவம், ஆகஸ்ட் 11 அன்று, உத்தர பிரதேச ஹர்டோய் பகுதியில் உள்ள பிஹானி கோட்வாலி வட்டாரத்தில் உள்ள மஹ்முத்புர் சரயா கிராமத்தில் ஒரு விபத்து குறித்து நடந்த வாக்குவாதம், முற்றி கைகலப்பாக மாறிய போது எடுக்கப்பட்டது என தெரிய வந்துள்ளது. மஹ்முத்புரில் வசிக்கும் சபா ஹைதர் என்பவர் மோட்டார்சைக்கிளில் சென்ற போது பர்வீன் என்பவர் மீது மோதி விட்டு, அவரது மோட்டார்சைக்கிளை அங்கேயே விட்டு விட்டு ஓடி விட்டார். ஆனால், அவர்தான் மோதியது என்பதை அறிந்து கொண்ட பர்வீன் வீட்டை சேர்ந்தவர்கள், சபா வீட்டிற்கு செல்லும் முன்பே அவர் வீட்டிற்கு சென்று விட்டனர். இரு குடும்பத்து பெரியவர்களும் தங்களுக்குள் பேசி சமாதானப்படுத்தியதால் பர்வீன் வீட்டை சேர்ந்தவர்கள் திரும்பி சென்றனர். இதையடுத்து ஹைதர் தன் கடைக்கு சென்றார். அப்போது பர்வீன் வீட்டை சேர்ந்தவர்கள் மீண்டும் அவரை சூழ்ந்து கொண்டு ரெயில்வே கிராசிங்கிற்கு அருகே அவரை அடித்தனர். இந்த சம்பவம் வீடியோவாக அப்போதே வெளியிடப்பட்டது. இச்சம்பவத்தில் ரெயில்வே கேட்மேனுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றும் இதில் எந்தவிதத்திலும் மத சம்பந்தமான காரணங்கள் இல்லை என ரெயில்வே உயர் அதிகாரிகளும், காவல்துறையினரும் உறுதி செய்துள்ளனர்.

## மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி பெறுவது ஒற்றுமையை வலுப்படுத்துகிறது மு.க.ஸ்டாலின்



சென்னை, ஆக. 20

மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி பெறுவது ஒற்றுமையை வலுப்படுத்துகிறது மு.க.ஸ்டாலின் 19 ஆகஸ்ட் 2023 3:31 PM கடினமான சூழலுக்கு இடையே மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் அதனால் துவளாமல் மீண்டுள்ளது மிகவும் நெகிழ்ச்சியடைய வைக்கிறது. நாம் ஒன்றிணைந்து, இந்தியாவின் ஒற்றுமை உணர்வைத் தழுவிக்கொள்வோம்.

மணிப்பூர் விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் பயற்சி பெற்று வருவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறி இருப்பதாவது: கடினமான சூழலுக்கு இடையே மணிப்பூர்விளையாட்டு வீரர்கள் அதனால்துவளாமல்மீண்டுள்ளது மிகவும் நெகிழ்ச்சியடைய வைக்கிறது. அவர்கள் தமிழ்நாட்டில் தங்கள் பயிற்சியைத் தொடங்குவதைக் கண்டு, நமது நெஞ்சங்கள் பெருமிதத்தால் பொங்குகின்றன. மணிப்பூரில் இருந்து தமிழ்நாட்டில் பயிற்சி பெற வந்துள்ள 15 வீரர்கள் மற்றும் 2 பயிற்சியாளர்கள் இப்போது எங்கள்விளையாட்டுக்குடும்பத்தின் ஒரு பகுதியாகி உள்ளனர். இது எல்லைகளுக்கு அப்பால் பிணைப்புகளை வலுப்படுத்துகிறது. நாம் ஒன்றிணைந்து, இந்தியாவின் ஒற்றுமை உணர்வைத் தழுவிக்கொள்வோம். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதில் பதிவிட்டுள்ளார்.

## தக்காளி ஒரு கிலோ ரூ.40க்கு விற்பனை: பொதுமக்கள் மகிழ்ச்சி



திருப்பூர், ஆக. 20

ஏராளமான விவசாயிகள் தக்காளியை கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். விவசாயிகள் தற்போது நிலையான விலை இருந்தால் போதும் என்று கருதுகின்றனர்.

திருப்பூர் தென்னம்பாளையம் சந்தையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து நாள்தோறும் ஏராளமான விவசாயிகள் தக்காளியை கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். தக்காளி விலை உச்சத்தில் இருந்த போது, அறுவடை செய்த விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து பலர் லட்சத்தில் சம்பாதித்தனர். இந்நிலையில் ஆந்திரா மற்றும் கர்நாடகம் மாநிலங்களில் தக்காளி விளைச்சல் அதிகரிக்கவே இங்கிருந்து ஏற்றுமதியான தக்காளி குறையத்தொடங்கிய நிலையில் தற்போது 15 கிலோ கொண்ட ஒரு டிப்பர் தக்காளி ரூ. 400க்கு விற்கப்படுகிறது. திருப்பூர் தென்னம்பாளையத்தை சேர்ந்த தக்காளி மொத்த வியாபாரி எஸ்.ஆர்.எம். ரவி கூறும்போது, தக்காளி விலை படிப்படியாக குறைந்துள்ளது. தற்போது ஒரு டிப்பர் தக்காளி நல்ல ரகம் ரூ. 400க்கு விற்பனையாகிறது. ரூ. 28 முதல் ரூ. 30 வரை கொள்முதல் செய்யப்படும் தக்காளி, தற்போது வெளிச்சந்தையில் ரூ. 40க்கு விற்கப்படுகிறது. 2 மற்றும் 3ம் ரக தக்காளிகள் ஒரு டிப்பர் ரூ. 200க்கு கொள்முதல் செய்யப்பட்டு, வெளிச்சந்தைகளில் ரூ. 20க்கு விற்கப்படுகிறது. ஒரு கட்டத்தில் விலை உச்சத்தில் இருந்த போது, விவசாயிகள் மகிழ்ச்சியில் இருந்தனர். தற்போது பொதுமக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஆந்திரா, கர்நாடக மாநிலங்களுக்கு இங்கிருந்து சென்ற தக்காளி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அங்கு அறுவடை தொடங்கிவிட்டதால், இங்கு பற்றாக்குறை இல்லை. ஆகவே விவசாயிகள் தற்போது நிலையான விலை இருந்தால் போதும் என்று கருதுகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திருப்பூர் சுடுகாட்டில் சிதறிக்கிடந்த உடல்கள் நாய்கள் கவ்வி சென்றதால் பரபரப்பு



திருப்பூர், ஆக. 20

சிதிலமடைந்த உடல்கள் சுடுகாட்டில் சிதறி கிடக்கிறது. பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அழுகிய உடல்கள் மீட்கப்பட்டு மீண்டும் புதைக்கப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சி 40வது வார்டு இடுவம்பாளையம் பகுதியில் 7 சென்ட் நிலத்தில் பொது சுடுகாடு செயல்பட்டு வருகிறது. கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு 200 குடும்பங்கள் மட்டுமே வசித்து வந்த நிலையில் தற்போது 3000க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். வாரத்தில் 4,5 உடல்கள் இந்த சுடுகாட்டில் புதைக்கப்படும். இந்த நிலையில் அங்கு உடல்களை புதைக்க இடம் இல்லாததால் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்ட உடல்களை வெளியே எடுத்து போட்டு புதிய உடலை புதைத்து வருகின்றனர். இதன் காரணமாக சிதிலமடைந்த உடல்கள் சுடுகாட்டில் சிதறி கிடக்கிறது.

இதனை நாய்கள் கவ்வி இழுத்து செல்கின்றன. அழுகிய நிலையில் உள்ள உடல்களை நாய்கள் பொது மக்கள் வாழும் பகுதிக்கு இழுத்து செல்வதால் அந்தப்பகுதியில் துர்நாற்றம் ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் பெண்கள் குழந்தைகளிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அழுகிய உடல்கள் மீட்கப்பட்டு மீண்டும் புதைக்கப்பட்டது. இந்த சம்பவம் திருப்பூர் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## உடுமலையில் வி.சி.க. கொடியேற்று விழா



உடுமலை, ஆக. 20

61 வது பிறந்த நாளை முன்னிட்டு கொடியேற்றுவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. கட்சியின் கொடியினை திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் ஏற்றி வைத்தார்

திருமாவளவனின் 61 வது பிறந்த நாளை முன்னிட்டு கொடியேற்று விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருப்பூர் மாவட்டம் உடுமலையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி திருப்பூர் தெற்கு மாவட்டம் சார்பில் நடைபெற்றது. உடுமலை ஒன்றியத்திற்குட்பட்ட எலையமுத்தூர், செல்வபுரம், கல்லாபுரம், பூளவாடி, கண்ணவநாயக்கனூர், தளி, தீபாலப்பட்டி, வல்லகுண்டபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் ஒன்றிய செயலாளர் தம்பி மகாலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது .கட்சியின் கொடியினை திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார் ஏற்றி வைத்தார் . சிறப்பு அழைப்பாளராக ஈரோடு திருப்பூர் மண்டல துணைச் செயலாளர் ஜல்லிபட்டி முருகன் , மாநில நிர்வாகிகள் கிப்டன் டேவிட் பால், சத்திய மூர்த்தி, உடுமலை ஒன்றிய பொருளாளர் சக்திவேல், எல்லை முத்தூர் ராமலிங்கம், செல்வபுரம் மாரிமுத்து ,தீபாலபட்டி திருமூர்த்தி, குடிமங்கலம் ஒன்றியசெயலாளர்முத்துச்சாமி, கடத்தூர் புதூர் முகாம் துணைச் செயலாளர் பிரபு, கடத்தூர் குணசேகரன், மாதவராஜ் மற்றும் பல முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் அருகே சேலையை அவிழ்த்து விவசாயிகள் நூதன போராட்டம்



மூலனூர், ஆக. 20

ஒவ்வொரு நாளும் நூதன முறையில் போராட்டம் நடத்துகின்றனர். ஒவ்வொரு நாளும் விவசாயிகள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டு வருவது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்டம் மூலனூரை அடுத்த பொன்னிவாடி கிராமத்தில் நல்லதங்காள் நீர்த்தேக்க அணை உள்ளது. இந்த அணையை கட்டுவதற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக்கோரி அப்பகுதி விவசாயிகள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று 7வது நாளாக போராட்டம் நீடிக்கிறது. ஒவ்வொரு நாளும் நூதன முறையில் போராட்டம் நடத்துகின்றனர்.

முதல் நாள் கோனேரிபட்டி கிராமத்தில் நல்லதங்காள் அணையில் இருந்து மண் எடுத்து வந்து அதை பூஜை செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 5வது நாளன்று வாயில் கருப்பு துணி கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். 6வது நாளான நேற்று நாய்க்கு தாலி கட்டி நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் 7வது நாளான இன்று சேலையை அவிழ்க்கும் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்படி விவசாயி ஒருவர் சேலை கட்டியிருந்த நிலையில், அதனை மற்ற விவசாயிகள் அவிழ்த்து அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கோஷங்கள் எழுப்பினர்.

ஒவ்வொரு நாளும் விவசாயிகள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டு வருவது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# விதிகளை மீறிய வாகனங்கள் பறிமுதல்

அவிநாசி, ஆக. 20

சொந்த காரை வாடகை உபயோகத்துக்கு பயன்படுத்திய கார் பறிமுதல் செய்யப்பட்டது.

விதிமுறைக்கு மாறாக அதிக அளவில் பள்ளி மாணவர்களை அழைத்து வந்த பயணிகள் ஆட்டோவை பறிமுதல் செய்யப்பட்டது.

அவிநாசியில் தகுதிச் சான்று இல்லாமல் அதிக அளவில் பள்ளி மாணவர்களை அழைத்து வந்த ஆட்டோ, சொந்த காரை வாடகை உபயோகத்துக்கு பயன்படுத்திய கார் ஆகியவற்றை வட்டார போக்குவரத்து அலுவலர் பாஸ்கரன் பறிமுதல் செய்தார்.




அவிநாசி புனித தோமையார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகே வட்டார போக்குவரத்து அலுவலர் பாஸ்கரன் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, விதிமுறைக்கு மாறாக அதிக அளவில் பள்ளி மாணவர்களை அழைத்து வந்த பயணிகள் ஆட்டோ, அதேபோல, சொந்த காரை வாடகைக்குப் பயன்படுத்தி பள்ளி மாணவர்களை அழைத்து வந்த கார் ஆகியவற்றை பறிமுதல் செய்தார். மேலும் இந்த வாகனங்களுக்கு ரூ. 17ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

# நகராட்சி கூட்டத்தில் 10 கவுன்சிலர்கள் எதிர்ப்பால் தீர்மானங்கள் ரத்து

பல்லடம், ஆக. 20

பல்லடம் நகராட்சி சாதாரண கூட்டம் நகராட்சி கூட்ட அரங்கில் நடைபெற்றது. போலீஸ் பாதுகாப்புடன் நகராட்சி கூட்டம் நடைபெற்றது. நகராட்சி தலைவர் கவிதாமணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஆணையாளர் முத்துசாமி மற்றும் 18 வார்டு கவுன்சிலர்கள் ,அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டம் துவங்கியதுமே கவுன்சிலர்கள் ஏன் ரகசிய கூட்டம் போல் நடத்துகின்றனர்.



பத்திரிக்கையாளர்கள், பார்வையாளர்கள் இருந்தால் தானே பொதுமக்கள் பிரச்சனை குறித்து என்ன பேசுகிறோம் , என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது மக்களுக்கு தெரிய வரும். அதை விடுத்து ரகசியமாக கூட்டம் நடத்துவது தேவையா என ஆட்சேபித்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில்48தீர்மானங்கள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதாகவும் இதற்கு 3,7,10,11,12,13,17, ஆகிய 7 வார்டு கவுன்சிலர்கள் ஆதரவு தெரிவித்ததாகவும், தீர்மானங்களை எதிர்த்து 1,2,4,6,8,9,14,15,16,18, ஆகிய 10 வார்டு உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் எந்த தீர்மானமும் நிறைவேற்றாமல் கூட்டம் முடிவுக்கு வந்தது. இவ்வாறு நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நாதகவுண்டம்பாளையத்தில் தேங்காய் உடைக்கும் போராட்டம்

பல்லடம், ஆக 20

பேருந்து நிலையம் முன்பு சிதறு தேங்காய் உடைக்கும் போராட்டம் நடைபெற்றது. விவசாயிகள் 200 மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தேங்காய்க்கு உரிய விலை கேட்டு பல்லடம் அருகே உள்ள நாதகவுண்டம்பாளையத்தில் பேருந்து நிலையம் முன்பு சிதறு தேங்காய் உடைக்கும் போராட்டம் நடைபெற்றது. கட்சி சார்பற்ற தமிழக விவசாய சங்க மாநிலத் தலைவர்சண்முகம் தலைமை தாங்கினார்.



துணைத் தலைவர் சண்முகசுந்தரம், மாநில கொள்கை பரப்பு செயலாளர்குண்டடம் ராசு, மாநில பொருளாளர் தங்கராஜ்,மாநில அவைத்தலைவர் பாலசுப்ரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில பிரச்சார குழுத் தலைவர் பூரண்டாம்பாளையம் மணி மற்றும் திருப்பூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தங்கவேல், திருப்பூர் மாவட்டத் தலைவர் ஈஸ்வரன் மற்றும் திருப்பூர் ,கோயம்புத்தூர்,கரூர் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய கிளை நிர்வாகிகள் மற்றும் ஏர்முனை இளைஞர் அணி, மாவட்ட ஒன்றிய கிளை நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் 200 மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் என்.எஸ். பி.நந்தகுமார் நன்றி கூறினார்.19ம் நாளாக தேங்காய் உடைக்கும் போராட்டம்நடைபெற்றுவருகிறது என்பதுகுறிப்பிடத்தக்கது.

# விபத்து ஏற்படுத்தி விட்டு நிற்காமல் சென்ற லாரியை மடக்கி பிடித்த பொதுமக்கள்

பல்லடம், ஆக. 20

சரக்கு லாரி ஒன்று ஸ்கூட்டர் மீது மோதுவது போல் வந்ததாக கூறப்படுகிறது. அந்த லாரியை தொடர்ந்து வந்த சுமார் 10க்கும் மேற்பட்ட லாரிகளை சிறை பிடித்தனர்.

பல்லடம் செட்டிபாளையம் ரோட்டில் பணிக்கம்பட்டி அருகே உள்ள இலந்த குட்டை என்ற பகுதியில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த சரக்கு லாரி ஒன்று ஸ்கூட்டர் மீது மோதுவது போல் வந்ததாக கூறப்படுகிறது. இதனால் நிலை தடுமாறிய அந்தப் பெண் ரோட்டை விட்டு திடீரென கீழே இறங்கியதால், ஸ்கூட்டர் சரிந்ததாக கூறப்படுகிறது.




விபத்தை ஏற்படுத்தி விட்டு அந்த லாரி நிற்காமல் சென்றதால், அதே பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் சென்று அந்த லாரியை சிறை பிடித்தனர்.

மேலும் அந்த லாரியை தொடர்ந்து வந்த சுமார் 10க்கும் மேற்பட்ட லாரிகளை சிறை பிடித்தனர். இதனால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து பாதித்தது. தகவல் அறிந்த பல்லடம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். லாரி டிரைவர் மீது நடவடிக்கை எடுப்பதாக கூறியதை அடுத்து சிறைபிடிப்பு போராட்டம் கைவிடப்பட்டது. இந்த போராட்டத்தால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# அவினாசி பேரூராட்சியில் ரூ.20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சிறுவர் பூங்கா திறப்பு

அவினாசி, ஆக. 20

மானிய திட்டத்தில் 20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய சிறுவர் பூங்கா நேற்று திறந்து வைக்கப்பட்டது. தனலட்சுமி பொன்னுசாமி பூங்காவை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.



திருப்பூர் மாவட்டம் அவினாசி பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. இதில் 5வது வார்டுக்கு உட்பட்ட நியூ டவுன் பகுதியில் 15 வது நிதி குழு மானிய திட்டத்தில் 20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய சிறுவர் பூங்கா நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு பேரூராட்சி துணைத்தலைவர்மோகன் தலைமை தாங்கினார். செயல் அலுவலர் ராமலிங்கம் முன்னிலை வகித்தார். பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி பூங்காவை ரிப்பன்வெட்டி திறந்து வைத்தார்.இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் சிறுவர்கள், சிறுமியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சோழவரம் அருகே பழுதாகி நின்ற லாரி மீது மற்றொரு லாரி மோதி விபத்து: 2 பேர் உயிரிழப்பு

சோழவரம், ஆக. 20

விபத்தில் லாரி ஓட்டுநர், மேற்பார்வையாளர் என இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் அருகே பழுதாகி நின்ற லாரி மீது பின்னால் இரும்புகளை ஏற்றி வந்த லாரி மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் லாரி ஓட்டுநர், மேற்பார்வையாளர் என இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் ஒருவர் காயங்களுடன் உயிர் தப்பினார். 3 மணிநேரம் போராடி விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை தீயணைப்பு படையினர் மீட்டனர். விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகம் முழுவதும் அரசுப்பணிக்காக 66 லட்சத்து 55 ஆயிரம் பேர் காத்திருப்பு

சென்னை, ஆக. 20

பதிவு செய்து அரசு வேலைக்கு காத்திருக்கும் ஆண்களின் எண்ணிக்கை 30 லட்சத்து 94 ஆயிரத்து 630. 46 முதல் 60 வயது வரையுள்ள பதிவுதாரர்கள் 2 லட்சத்து 56 ஆயிரத்து 68 பேர். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6,771 பேர் உள்ளனர்.




தமிழகத்தில் 10ம் வகுப்பு, பிளஸ்2, கல்லூரிப்படிப்பு முடித்து வெளியேறுபவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வருகின்றனர். அவர்கள் தங்களுடைய வேலைவாய்ப்பு பதிவை புதுப்பித்தும் வருகின்றனர். 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை பதிவை புதுப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் 2 மாதங்கள் சலுகைகள் வழங்கப்படுகிறது. இந்தநிலையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மொத்தம் எத்தனை பேர் வேலைக்காக பதிவு செய்துள்ளனர் என்பது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த ஜூலை மாதம் 31ந்தேதி நிலவரப்படி, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவுதாரர்கள் பற்றிய விவரம் வருமாறு: பதிவு செய்து அரசு வேலைக்கு காத்திருக்கும் ஆண்களின் எண்ணிக்கை 30 லட்சத்து 94 ஆயிரத்து 630; பெண்களின் எண்ணிக்கை 35 லட்சத்து 60 ஆயிரத்து 846; மூன்றாம் பாலினத்தவர் எண்ணிக்கை 290 என மொத்தம் 66 லட்சத்து 55 ஆயிரத்து 766 பேராகும். அவர்களில் 18 வயதுக்கு உட்பட்ட பள்ளி மாணவர்கள் 16 லட்சத்து 87 ஆயிரத்து 537 பேர். 19 முதல் 30 வயது வரை உள்ள பலதரப்பட்ட கல்லூரி மாணவர்கள் 28 லட்சத்து 53 ஆயிரத்து 916 பேர். 31 முதல் 45 வயது வரை உள்ளவர்கள் 18 லட்சத்து 51 ஆயிரத்து 474 பேர். 46 முதல் 60 வயது வரையுள்ள பதிவுதாரர்கள் 2 லட்சத்து 56 ஆயிரத்து 68 பேர். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6,771 பேர் உள்ளனர். மாற்றுத்திறனாளிகளில் 1 லட்சத்து 47 ஆயிரத்து 284 பேர் பதிவு செய்து காத்திருக்கின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குல்பி ஐசை சாப்பிட்டு மயங்கி விழுந்த குழந்தைகள்: விழுப்புரத்தில் பரபரப்பு

விழுப்புரம், ஆக. 20

குல்பி ஐஸ் சாப்பிட்ட 40 பேருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விக்கிரவாண்டி ஒன்றியத்துக்குட்பட்ட முட்டத்தூர் கிராமத்தில் மொபட்டில் வந்த நபரிடம் அப்பகுதியை சேர்ந்த சிறுவர், சிறுமிகள் சிலர் குல்பி ஐஸ் வாங்கி சாப்பிட்டனர். பின்னர் இரவு 10 மணியளவில் ஐஸ் சாப்பிட்ட சிறுவர், சிறுமிகளுக்கு திடீரென வாந்தி, மயக்கம், வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.



அடுத்தடுத்து ஒவ்வொருவராக மயங்கிவிழுந்ததால் அதிர்ச்சி அடைந்த அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அவர்களை சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். 3 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட மொத்தம் 35 சிறுவர், சிறுமிகளுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். குல்பி ஐசில் ஏதேனும் மயக்க மருந்து கலந்துள்ளதா? அல்லது கெட்டுப் போன ஐசை வாங்கி சாப்பிட்டதால் வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டதா? என்பது குறித்து சுகாதாரத்துறை மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். மேலும் குல்பி ஐஸ் விற்பனை செய்த மர்ம நபரை விக்கிரவாண்டி போலீசார் தேடி வருகிறார்கள். இச்சம்பவம் முட்டத்தூர் கிராமத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உதயநிதி ரசிகர்கள் தி.மு.க.வினர் திரளாக பங்கேற்க வேண்டும்: என்.எஸ்.கே. சிவக்குமார் அழைப்பு

திருப்பூர், ஆக.20

ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற தலைவரும் இளைஞர்அணி தெற்கு மாவட்ட துணை அமைப்பாளருமான என்.எஸ்.கே. சிவக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சமூக நீதி, முற்போக்கு சிந்தனைகளை, திராவிடர்சித்தாந்தங்களை சீர்குலைத்து வரும் 9 ஆண்டுகால மத்தியில் ஆளும் ஒன்றிய பாஜக., அரசின் சர்வாதிகாரப் போக்கினை கண்டித்தும், சாமானிய நடுத்தர பள்ளி கல்லூரி மாணவர்களின் லட்சிய மருத்துவ கனவிற்கு எதிராக உயிர்க் கொல்லி நோயாக உருவெடுத்து இருக்கும் நீட் தேர்வினை போராட்டம் சர்வாதிகாரத்துடன் ஆளும் பாஜக., அரசையும் இதற்கு அட்சாரமிடும் தமிழக அதிமுக.. மற்றும் தமிழக ஆளுநரை கண்டித்தும் தி.மு.க. சார்பில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலின் படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி தி.மு.க., இளைஞரணி, மருத்துவர் அணி,மாணவர் அணியின் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்டம் சார்பில் நாளை 20ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணியில் இருந்து மாலை 6 மணி வரை உண்ணாவிரத போராட்டம் திருப்பூர் ரெயில் நிலையம் முன்பு பெரியார். அண்ணா சிலைக்கு அருகில் நடைபெற உள்ளது.



ரத்து செய்திடவும், வல்லரசு நாடுகளுக்கு நிகராக கல்விமருத்துவம்,வேலை வாய்ப்பில் சம உரிமை கிடைத்திடும் வகையிலும்,

இதற்கு எதிராக 18 மாநிலங்களில் கூட்டணி

இதில் உதயநிதி ரசிகர் நற்பணி மன்ற இந்நாள், முன்னாள், மாவட்ட,மாநகர ஒன்றிய, நகர, பேரூராட்சி, ஊராட்சி, கிளை வார்டு, பகுதி மன்ற பொறுப்பாளர்கள், பரிந்துரையாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக அறவழியில் உண்ணாவிரதப் போராட்டம் வெற்றியடைய செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஓணம் பண்டிகையை முன்னிட்டு குமரியில் உள்ளூர் விடுமுறை அறிவிப்பு

கன்னியாகுமரி, ஆக. 20

கன்னியாகுமரிமாவட்ட ஆட்சியர் சார்பில் செய்தி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக செப்டம்பர் 23ம் தேதி அன்று வேலை நாளாக அறிவிப்பு.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் வரும் 29ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் சார்பில் செய்தி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஓணம் பண்டிகை தினத்தினை முன்னிட்டு 29.08.2023 (செவ்வாய் கிழமை) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்படுகிறது. 29.08.2023 அன்று அறிவிக்கப்பட உள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக செப்டம்பர்திங்கள்நான்காவது



கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கும் அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் வேலை நாளாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஓணம் பண்டிகை தினத்திற்கு உள்ளூர் விடுமுறை செலவாணி முறிச் சட்டம் 1881ன் படி அறிவிக்க ப்படவில்லை என்பதால் 29.08.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## எங்களுக்கு இ.டி. பார்த்தும் பயமில்லை மோடி பார்த்தும் பயமில்லை: அமைச்சர் உதயநிதி

செங்கல்பட்டு, ஆக. 20

விசாரணை அமைப்புகள் பாஜகவின் அணிகளாக உள்ளன. நீட்டுக்கு எதிராக அதிமுக எதையும் செய்யவில்லை.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் கலைஞர் திருவுருவச்சிலை மற்றும் பேனா வடிவிலான சிலையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்னர் உரையாற்றிய அவர், விசாரணை அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்து பேசினார். அப்போது அவர், " விசாரணை அமைப்புகள் பாஜகவின் அணிகளாக உள்ளன" என்றார். மேலும் அவர் கூறியதாவது: பாஜக என்ற கட்சியே தமிழ்நாட்டிற்கு தேவையற்றது. எல்லா கட்சிகளிலும் பல அணிகள் உள்ளது. அதே போல, சி.பி.ஐ, இ.டி (அமலாக்கத்துறை), ஐ.டி போன்ற பல அணிகள் பாஜகவில் உள்ளது. நாங்கள் இடி பார்த்தும் பயப்பட மாட்டோம், மோடியை பார்த்தும் பயப்பட மாட்டோம். நீட்டுக்கு எதிராக அதிமுக எதையும் செய்யவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## மதுரையில் அதிமுக மாநாடு எடப்பாடி பழனிசாமிக்கு உற்சாக வரவேற்பு



மதுரை, ஆக. 20

அ.தி.மு.க. தலைமை திட்டமிட்டு அதற்கான பணிகளை முழு வீச்சில் செய்து வருகிறார்கள். எடப்பாடி பழனிசாமிக்கு பூரண கும்ப மரியாதையுடன் தொண்டர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி போட்டியின்றி தேர்வானதையடுத்து முதல் முறையாக அ.தி.மு.க. எழுச்சி மாநாட்டை எடப்பாடி பழனிசாமி மதுரையில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) கூட்டி உள்ளார். அ.தி.மு.க. வீர வரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாடு என்ற தலைப்பில் இந்த மாநாடு மிக பிரமாண்ட முறையில் நடத்தப்படுகிறது. அ.தி.மு.க.வின் பொன்விழா ஆண்டையொட்டி நடத்தப்படும் இந்த மாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்த அ.தி.மு.க. தலைமை திட்டமிட்டு அதற்கான பணிகளை முழு வீச்சில் செய்து வருகிறார்கள். இந்நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இன்று மாலை மதுரைக்கு வருகை தந்தார். அவருக்கு வழியெங்கும் மலர்கள் தூவி, பூரண கும்ப மரியாதையுடன் தொண்டர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

## காஞ்சிபுரம் முதியவர் உடல் மருத்துவ கல்லூரிக்கு தானம்: ஆசையை நிறைவேற்றிய குடும்பத்தினர்



காஞ்சிபுரம், ஆக. 20

தகவல் தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களில் கையெழுத்திட்டனர். சம்பவம் காஞ்சிபுரம் பகுதியில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் படிக்க காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாநகராட்சி சின்ன காஞ்சிபுரம் திருச்சோலை தெரு பகுதியைச் சேர்ந்தவர் திருவேங்கடம் (வயது 75). இவருக்கு முரளிதரன் என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். சமுதாய கரையோடு வாழ்ந்தவரான திருவேங்கடம், தான் இறந்து போனால் தனது உடலை மருத்துவ கல்லூரி மாணவர்கள் ஆராய்ச்சிக்கு தானமாக வழங்கிட வேண்டும் என தனது மகன் முரளிதரன் மற்றும் குடும்பத்தாரிடம், நண்பர்களிடமும் தெரிவித்து இருந்தார். இந்நிலையில் கடந்த ஒரு வார காலமாக உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திருவேங்கடம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். திருவேங்கடத்தின் கடைசி ஆசையை நிறைவேற்றிடும் வகையில் உறவினர்களுடனும், நண்பர்களுடனும், கலந்து ஆலோசனை செய்த குடும்பத்தினர் முதியவர் திருவேங்கடத்தின் உடலை வேலூர் கிறிஸ்தவ மருத்துவ கல்லூரிக்கு தானம் வழங்க முடிவு செய்து, தகவல் தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களில் கையெழுத்திட்டனர். அதன்படி திருவேங்கடத்தின் உடலுக்கு உறவினர்கள் நண்பர்கள் முன்னிலையில் குடும்பத்தினர் சம்பிரதாயம் முறைப்படி இறுதி சடங்குகளை செய்த பின்னர் சிறிது தூரம் முதியவர் திருவேங்கடத்தின் உடலை எடுத்துச் சென்று தயாராக இருந்த வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி ஆம்பு லன்சில் ஒப்படைத்தனர். சமூக அக்கறையோடு வாழ்ந்த முதியவரின் கடைசி ஆசைப்படி, மருத்துவக் கல்லூரிக்கு முதியவரின் உடலை குடும்பத்தினர் தானமாக வழங்கிய சம்பவம் காஞ்சிபுரம் பகுதியில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## கொங்கணாபுரம் அருகே ஆடு மேய்க்க சென்ற விவசாயி கிணற்றில் பிணமாக மீட்பு

எடப்பாடி, ஆக. 20

எடப்பாடி அடுத்த கொங்கணாபுரம் அருகே ஆடு மேய்க்க சென்ற விவசாயி, அப்பகுதியில் உள்ள விவசாய கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அவர் இறப்பு குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட, கோரணம்பட்டி ஊராட்சி, கல்மேடு மணியக்காரன் வளவு பகுதியைச் சேர்ந்த விவசாயி சின்னண்ணன் (71), இவர் தனது விவசாய நிலத்தில் ஆடுகளையும் வளர்த்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று சின்னண்ணன் வழக்கம் போல் தனது ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டி சென்ற நிலையில், இரவு நீண்ட நேரம் ஆகியும் வீடு திரும்பா ததால் அவரது உறவினர்கள் அக்கம் பக்கத்தில் உள்ள விவசாய நிலங்களில் தேடிப் பார்த்தனர். இந்நிலையில் அப்பகுதியில் உள்ள விவசாய கிணற்றின் அருகே சின்னண்ணன் அணிந்திருந்த காலணிகள் கிடப்பதைக் கண்ட அவரது உறவினர்கள்,

இதுகுறித்து எடப்பாடி தீயணைப்பு துறை மற்றும் கொங்கணாபுரம் காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்த சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் காவல் துறையினர் கிணற்றிலிருந்த தண்ணீரை மின் மோட்டார் மூலம் வெளியேற்றி பார்த்தபோது, அங்கு விவசாயி சின்னண்ணன் சடலமாக கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

தீயணைப்பு துறை வீரர்கள் உதவியுடன் அவரது சடலத்தை மீட்ட போலீசார், அவரது உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து அவர் இறப்பு குறித்து வழக்கு பதிவு செய்து தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அண்ணாமலை நடைபயணத்திற்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு



நெல்லை, ஆக 20

நெல்லை மாவட்ட பா.ஜனதா நிர்வாகிகள் திரண்டு வரவேற்பு அளித்தனர். நடைபயணத்தின் போது அண்ணாமலையுடன் ஏராளமானோர் செல்பி எடுத்துக் கொண்டனர்.

பாரதிய ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை என் மண் என் மக்கள் என்ற தலைப்பில் தமிழகத்தில் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். கடந்த மாதம் 28ந் தேதி ராமேஸ்வரத்தில் தொடங்கிய இந்த நடைபயணம் பல்வேறு மாவட்டங்கள் சென்ற நிலையில், கடந்த 11ந் தேதி முதல் 14ந் தேதி வரை தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபயணம் மேற்கொண்டார். பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சென்ற அண்ணாமலை நேற்று வரை அந்த மாவட்டத்தில் நடை பயணம் மேற்கொண்டார். அங்கிருந்து, இன்று காலை நெல்லை மாவட்டத்திற்கு வந்த அண்ணாமலை பாளை திருச்செந்தூர் சாலையில் எம்.கே.பி. நகரில் உள்ள பெல் மைதானம் அருகே தனது நடை பயணத்தை தொடங்கினார். அங்கு அவருக்கு நெல்லை மாவட்ட பா. ஜனதா நிர்வாகிகள் திரண்டு வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து அங்கிருந்து நடைபயணம் மேற்கொண்ட அண்ணாமலை பாளை மார்க்கெட் சாலை வழியாக சித்த மருத்துவ கல்லூரி பகுதிக்கு வந்தடைந்தார். வழிநெடுக அவரது நடை பயணத்திற்கு பொது மக்களும், தொண்டர்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் அங்கிருந்து லூர்து நாதன் சிலை அருகே உள்ள வீரன் அழகு முத்துக்கோன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். பின்னர் தெற்கு பஜார் வழியாக பாளை ராஜகோபாலசாமி கோவில் வந்தடைந்தார். அங்கு அவரது பிரசாரத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனத்தில் நின்று பொது மக்களிடையே பேசினார். அவரது பேச்சை கேட்க பா.ஜனதா நிர்வாகிகளும், தொண்டர்களும், பொது மக்களும் அதிக அளவில் திரண்டனர். இதனை ஒட்டி ராஜகோபாலசாமி கோவில் பகுதியில் வரவேற்பு பேனர்கள், கட்சி கொடி உள்ளிட்டவை அதிகளவில் கட்டப்பட்டிருந்தன. மேலும் தாரை தப்பட்டை முழங்கப்பட்டது. கும்மி, கோலாட்டம், கரகாட்டம் உள்ளிட்டவையும் நடைபெற்றது. நடை பயணத்தின் போது அண்ணாமலையுடன் ஏராளமானோர் செல்பி எடுத்துக் கொண்டனர். இந்த நடை பயணத்தின் போது முன்னாள் மத்திய மந்திரி பொன் ராதாகிருஷ்ணன், தமிழக மக்கள் முன்னேற்ற கழக நிறுவன தலைவர் ஜான் பாண்டியன், நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ., நெல்லை மாவட்ட பா.ஜனதா தலைவர்கள் தயாசங்கர், தமிழ்ச்செல்வன், மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## யாதவர் மகாசபை எழுச்சி மாநாட்டுக்கான கால்கோள் விழா



சென்னை, ஆக. 20

விழாவுக்கான ஏற்பாடுகளை திருச்சி தமிழ்ச் செல்வன் மற்றும் ஸ்ரீதர் ஆகியோர் செய்திருந்தனர். மாவட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு யாதவா மகா சபை சார்பில் யாதவர் எழுச்சி மாநாடு திருச்சி சிறுகனூரில் அடுத்த மாதம் (செப்டம்பர்) 2ந்தேதி நடைபெற உள்ளது.

அதற்கான கால்கோள் விழா வீரன் அழகுமுத்துக் கோன் மாநாட்டு திடலில் மாநில தலைவர் டாக்டர். நாசே.ஜெ ராமச்சந்திரன், தலைமையிலும், மாநில பொதுச்செயலாளர் வேலு மனோகரன் மற்றும் மாநில பொருளாளர் கே.எத்திராஜ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

விழாவில் மாநில நிர்வாகிகள், மகளிர் அணி செயலாளர் டாக்டர் எம்.முத்துலட்சுமி, மாநில இளைஞர் அணி பொதுச்செயலாளர், பொட்டல். எஸ். துரை, எம்.ஆர். பன்னீர் செல்வம், எம்.கே.ஆர் மெய்யப்பன், வழக்கறிஞர் கே. சபாபதி, என். எஸ்.சேது மாதவன், எம். தனுஷ்கோடி ஓ.எம்.பி ராமதாஸ், வியாசை எஸ். செல்வன், எஸ். அடைக்கலம் என்.முத்தையா, டி. கருணாநிதி, ஆர்.வி. கருணாநிதி டி.கே.ஜி. கண்ணன், ஏ.அண்ணா மலை, எஸ்.வி.ஜெ. கோகுல கிருஷ்ணன், ஆர்.ஆர்..உதயகுமார், எல் எஸ். பாலாஜி, மாவட்ட தலைவர்கள் தங்க ராஜ், ஜெயபிரகாஷ்,

மற்றும் மாவட்ட நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவுக்கான ஏற்பாடுகளை திருச்சி தமிழ்ச் செல்வன் மற்றும் ஸ்ரீதர் ஆகியோர் செய்திருந்தனர். விழாவில் தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமான நிர்வாகிகளும், பெண்களும் கலந்து கொண்டனர்.

## தருமபுரியில் தொல்.திருமாவளவன் பிறந்தநாள் கொண்டாட்டம்



தருமபுரி, ஆக. 20

தருமபுரி மத்திய மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. யின் 61வது பிறந்தநாள் விழா தருமபுரியில் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு மத்திய மாவட்ட செயலாளர் பாண்டியன் தலைமை தாங்கினார். மாநில நிர்வாகிகள் எம்.எஸ்.ராமன், கப்பல் செந்தில்குமார், சிவஞானம், கிள்ளிவளவன், பரோடா வங்கி பெருமாள், திருமாறன், மாரவாடி செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவையொட்டி கட்சி நிர்வாகிகள் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே அமைந்துள்ள அம்பேத்கரின் உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதனையடுத்து கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

விழாவில் முத்துக்குமார் ஆதித்தமிழர், மன்னன், தமிழ்வளவன், தனம், விடு தலைமதி, ஆட்டோ கிருஷ்ணன், சங்கர், அம்பேத் வளவன், ஜெகநாதன், நெல்லை சீனி, ஆறுமுக பாண்டி, தென்பாண்டியன், மூர்த்தி, செல்லதுரை, கார்த்திக், நல்லதம்பி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மதுரையில் அ.தி.மு.க. மாநாடு: கிருஷ்ணகிரியில், ஜெயலலிதா பேரவை சார்பில் வழியனுப்பும் நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி, ஆக. 20

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் அசோக்குமார் எம். எல்.ஏ. வாகனங்களை வழியனுப்பி வைத்தார். முன்னதாக அ.தி.மு.க. மாநாடு குறித்த துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்கினார்கள்.

கிருஷ்ணகிரி, மதுரையில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) அ.தி.மு.க. பொன் விழா ஆண்டையொட்டி எழுச்சி மாநாடு நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற்காக கிருஷ்ணகிரி மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் கே.ஆர்.சி.தங்கமுத்து தலைமையில் அ.தி. மு.க.வினர் 3 வாகனங்களில் புறப்பட்டு சென்றனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் அசோக்குமார் எம். எல்.ஏ. வாகனங்களை வழியனுப்பி வைத்தார். முன்னதாக அ.தி.மு.க. மாநாடு குறித்த துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்கினார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன், முன்னாள் ஆவின் தலைவர் தென்னரசு, மற்றும் அ.தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

## பாபநாசம் அரசு ஆஸ்பத்திரியில் கலெக்டர் 'திடீர்' ஆய்வு



பாபநாசம், ஆக. 20

மருந்தகம், ஆய்வகம் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் தரம் குறித்தும் ஆய்வு செய்தார். போதிய அளவில் மருந்து இருப்பு உள்ளதா? எனவும் ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அரசு ஆஸ்பத்திரியில் மாவட்ட கலெக்டர் தீபக்ஜேக்கப் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவர், பணியாளர் வருகைப் பதிவேடு , பிரசவ வார்டு, பல் மருத்துவ பகுதி, பெண்கள் குழந்தைகள் பிரிவு, பதிவு சீட்டு வழங்கும் இடம், அவசர சிகிச்சை பிரிவு, மக்களை தேடி மருத்துவ பிரிவு, மருந்தகம், ஆய்வகம் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் தரம் குறித்தும் ஆய்வு செய்தார். மேலும் போதிய அளவில் மருந்து இருப்பு உள்ளதா ? எனவும் ஆய்வு செய்தார். ஆய்வின் போது பாபநாசம் அரசு ஆஸ்பத்திரியின் தலைமை மருத்துவர் குமரவேல், மருத்துவர்கள் ராஜசேகர், நிர்மல் குமார் மற்றும் செவிலியர்கள், மருத்துவ பணியாளர்கள் உடன் இருந்தனர்.

## தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் குழந்தைகள் கவனிப்பு மையம்



தேனி, ஆக. 20

அரசு ஊழியர்களின் 1 வயது முதல் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அங்கன்வாடி ஊழியர்கள் மூலம் பராமரிக்கப்படுகிறது. குழந்தைகள் கவனிப்பு மையம் அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், அரசு ஊழியர்களின் 1 வயது முதல் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தொலைக்காட்சி வசதியுடன் கூடிய குளிரூட்டப்பட்ட கவனிப்பு மையத்தினை மாவட்ட கலெக்டர் ஷஜீவனா தொடங்கி வைத்தார். தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு அரசின் சார்பில் மகப்பேறு விடுப்பு 12 மாதங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மகப்பேறு விடுப்பு முடிந்து பணியில் சேரும், ஒரு குடும்பத்தில் கணவன். மனைவி அல்லது இருவரும் அரசு ஊழியர்களாக பணிபுரியும் பட்சத்தில் அவர்களின் குழந்தைகளை கவனித்து கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது. இந்த சூழ்நிலையை தவிர்ப்பதற்காக, மாவட்ட கலெக்டர் அலுவலகம், மாவட்ட காவல் அலுவலகம், ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம், வேலை வாய்ப்பு அலுவலகம் என மாவட்ட கலெக்டர் பெருந்திட்ட வளாகத்திற்கு உட்பட்ட அலுவலகங்களில் பணிபுரியும் அரசு பெண் ஊழியர்களின் நலன் கருதி, அவர்களின் 1 வயது முதல் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அங்கன்வாடி ஊழியர்கள் மூலம் பராமரிப்பதற்காக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின் 3வது தளத்தில் குளிரூட்டப்பட்ட மற்றும் தொலைக்காட்சி வசதியுடன் கூடிய குழந்தைகள் கவனிப்பு மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு மாதக்கட்டணமாக ரூ.500 மட்டும் செலுத்தப்பட வேண்டும். குழந்தைகள் கவனிப்பு மையம் அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். குழந்தைகளுக்கு தொலைக்காட்சி மூலம் அறிவு சார்ந்த குறும்படங்கள், விளையாட்டு குறும்படங்கள் ஒளிபரப்பப்படும். மேலும், கல்வி கற்பிக்கும் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்களுடன், குழந்தைகளை கண்காணித்துக் கொள்ள 2 அங்கன்வாடி பணியாளர்கள் சுழற்சி முறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மையத்தில் குழந்தைகளுக்கு பால் மற்றும் பழங்கள் தினசரி வழங்கப்பட உள்ளது. வாரம் ஒரு முறை குழந்தைகளுக்கு சுழற்சி முறையில் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள மருத்துவ குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், உடனடி மருத்துவ தேவைக்காக, மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் சார்பில் மருத்துவரை அழைத்து மருத்துவம் மேற்கொள்ளவும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என கலெக்டர் தெரிவித்தார்.

# ஷாருக்கான் பட விழாவில் கலந்து கொள்ளும் விஜய்.. உண்மை என்ன?



தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும்அட்லீதற்போதுஇயக்கியுள்ளதிரைப்படம்'ஜவான்'. இதில்ஷாருக்கான்கதாநாயகனாகநடித்துள்ளார்.நயன்தாரா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, தீபிகா படுகோனே, பிரியாமணி உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். இப்படத்தின் மூலம் பாலிவுட் பட உலகில் அனிருத் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ளார். பான் இந்தியா படமாக உருவாகியுள்ள 'ஜவான்' திரைப்படம் வருகிற செப்டம்பர் மாதம் 7ந்தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.இந்நிலையில்,இப்படத்தின்புரொமோஷனுக்காகபடக்குழுபலநகரங்களுக்குசெல்லவுள்ளதாக கூறப்படுகிறது. இதில், படக்குழுவினர் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர். இதைத்தொடர்ந்து சென்னையில் நடைபெறும் 'ஜவான்' பட புரொமோஷனில் நடிகர் விஜய் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கு முன்பு 'ஜவான்' திரைப்படத்தில் விஜய் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளதாக செய்தி பரவி வந்த நிலையில் தற்போது விஜய் புரொமோஷனில் கலந்து கொள்வதாக கூறப்படுவது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

# கண்காணிக்க தயாரான கேமராக்கள்.. பிக்பாஸ்7 டீசரை பகிர்ந்த கமல்ஹாசன்




தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மிகவும் பிரபலமானது பிக்பாஸ். இந்த நிகழ்ச்சியில் இதுவரை ஆறு சீசன்கள் முடிவடைந்துள்ளதை அடுத்து விரைவில் ஏழாவது சீசன் தொடங்கப்படவுள்ளது. மேலும் இதற்கான போட்டியாளர்கள் தேர்வு விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் சீசனில் ஆரவ் டைட்டிலை தட்டி சென்றார். இதனை தொடர்ந்து இரண்டாவது சீசனில் ரித்விகாவும், மூன்றாவது சீசனில் முகின் ராவும், நான்காவது சீசனில் ஆரியும், ஐந்தாவது சீசனில் ராஜுவும், ஆறாவது சீசனில் அசீமும் டைட்டிலை கைப்பற்றினர். இந்த நிகழ்ச்சியின் ஆறு சீசன்களையும் நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கினார். இந்நிலையில், 'பிக்பாஸ்' 7வது சீசன் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, பிக்பாஸ் சீசன் 7 விரைவில் வெளியாகும் என கமல்ஹாசன் தனது சமூக வலைதளத்தில் டீசர் ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளார். இதனால் ரசிகர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

# அடுத்தடுத்து அரசியல் தலைவர்களை சந்திக்கும் ரஜினி.. காரணம் தெரியுமா?

இந்திய திரையுலகின் முன்னணி நடிகரான ரஜினிகாந்த், தான் நடிக்கும் ஒவ்வொரு படத்தின் படப்பிடிப்பு முடிந்ததும் இமயமலைக்கு பயணிப்பது வழக்கம். உடல்நலக்குறைவு காரணமாக 2010ம் ஆண்டுக்கு பிறகு இமயமலை பயணத்தை அவர் தவிர்த்து வந்தார். 2018ம் ஆண்டில் 'காலா', '2.0' படங்களின் படப்பிடிப்பு முடிந்ததும் இமயமலைக்கு சென்றார். ரஜினி சி.பி.ராதாகிருஷ்ணன் அதன்பிறகு கொரோனா சூழல் காரணமாக பயணத்தை தவிர்த்தார். இதையடுத்து நெல்சன் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள 'ஜெயிலர்' திரைப்படம் வெளியாகுவதற்கு முன்பு இமயமலைக்கு சென்ற ரஜினிகாந்த் ரிஷிகேஷில் உள்ள தயானந்த சரஸ்வதி ஆசிரமத்திற்கு சென்று துறவிகளை சந்தித்தார்.



தொடர்ந்து பத்ரிநாத் கோவிலுக்கு சென்று வழிப்பட்டு பாபாஜி குகையில் தியானத்தில் ஈடுப்பட்டார். ஆனந்தி பென் ரஜினி இதையடுத்து ஜார்க்கண்ட் ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்த ரஜினிகாந்த் ராஞ்சியில் உள்ள யோகதா சத்சங்க ஆசிரம தலைமையகத்துக்கு சென்று, அங்குள்ள துறவிகளை சந்தித்தார். இந்நிலையில், நடிகர் ரஜினிகாந்த் உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனந்தி பென்னை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமாக நடைபெற்றுள்ளது.

# 20 வயதிலேயே அட்ஜஸ்ட்மென்ட் செய்ய சொன்னார்கள்: உண்மையை உடைத்த ரெஜினா



தமிழில் கேடி பில்லா கில்லாடி ரங்கா படத்தின் மூலம் அனைவராலும் அறியப்பட்டவர் ரெஜினா கசாண்ட்ரா. இவர் கண்டநாள் முதல், மாநகரம், கசட தபற, சரவணன் இருக்க பயமேன் உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். தெலுங்கு மொழியிலும் அதிக படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக வலம் வருகிறார்.

இந்த நிலையில் சினிமா வாய்ப்பு கேட்டபோது தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை நடிகை ரெஜினா கசாண்ட்ரா பகிர்ந்துள்ளார். அவர் கூறியதாவது, முதலில் நான் சினிமாவில் நடிக்க வந்த போது பட வாய்ப்பு கேட்டு சிலரை அணுகினேன். அதில் ஒருவர் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு அட்ஜஸ்ட்மென்டுக்கு சம்மதித்தால் உடனே படப்பிடிப்புக்கு செல்லலாம் என்றார். முதலில் அவர் சொன்னது எனக்கு புரியவில்லை. சம்பளம் விஷயம் பற்றி சொல்கிறார் என்று நினைத்து சரி எனது மானேஜர் உங்களிடம் பேசுவார் என்றேன். மானேஜர் பேசிய பிறகுதான் போன் செய்தவர் படுக்கைக்கு அழைக்கும் நோக்கில் என்னை கேட்டு இருக்கிறார் என்று புரிந்தது. அப்போது எனக்கு 20 வயது தான். சில நடிகைகள் இதுபோன்ற சம்பவங்களை எதிர்கொண்டு இருக்கலாம். இன்னும் சில நடிகைகள் பெயர் வாங்க பொய் கூட சொல்வார்கள் என்று கூறினார்.

# ரியல் கிங் என்பதை ரஜினி நிரூபித்துள்ளார் துல்கர் சல்மான்



துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'கிங் ஆஃப் கோதா'. இப்படம் ஓணம் அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இயக்குனர் அபிலாஷ் ஜோஷி இயக்கத்தில் துல்கர் சல்மான் நடித்திருக்கும் திரைப்படம் 'கிங் ஆஃப் கோதா'. ஜீ ஸ்டுடியோஸ் மற்றும் வேஃபேரர் ஃபிலிம்ஸ் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது. ஜேக்ஸ் பிஜாய் மற்றும் ஷான் ரஹ்மான் இணைந்து இசையமைக்கும் இப்படத்திற்கு நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்கிறார். இப்படம் ஓணம் அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து 'கிங் ஆஃப் கோதா' படக்குழு புரோமோஷன் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், நேற்று சென்னையில் நடைபெற்ற புரோமோஷன் நிகழ்ச்சியில் நடிகர் துல்கர் சல்மான், "ரஜினி தான் என்றும் ரியல் கிங் . 'ஜெயிலர்' திரைப்படத்திற்கு வந்த கூட்டத்துல ஒரு சதவீதம் என் படத்துக்கு வந்தாலே அது ரொம்ப பெரிய விஷயம்" என்று கூறியுள்ளார்.

# உனக்கு பிடிச்சததான் இயற்கை முதல்ல புடுங்கும்.. கவனம் ஈர்க்கும் யோகிபாபு பட டிரைலர்



நடிகர்யோகிபாபுநடித்துள்ளதிரைப்படம்'லக்கிமேன்'.'லக்கிமேன்'திரைப்படம் செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இயக்குனர் பாலாஜி வேணுகோபால் இயக்கத்தில் யோகிபாபு 'லக்கி மேன்' திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தில் வீரா, ரேச்சல் ரெபேக்கா, அப்துல் லீ, ஆர்.எஸ். சிவாஜி, அமித் பார்கவ், சாத்விக் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். திங்க் ஸ்டூடியோஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். உண்மையான அதிர்ஷ்டம் என்றால் என்ன என்பதைக் கண்டறியும் ஒரு மனிதனின் அதிர்ஷ்டத்தை மையமாக வைத்து உருவாகியுள்ள இப்படத்தின் முதல் தோற்ற போஸ்டர் சமீபத்தில் வெளியாகி வைரலானது.

'லக்கி மேன்' படத்தின் தமிழ்நாடு வெளியீட்டு உரிமையை சக்தி பிலிம் பேக்டரி நிறுவனம்கைப்பற்றியுள்ளது.இந்நிலையில்,இப்படத்தின்டிரைலர்வெளியாகியுள்ளது.'உனக்குபிடிச்சததான் இயற்கை முதல்ல புடுங்கும்' போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ள இந்த டிரைலர் சமூக வலைதளத்தில் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. 'லக்கி மேன்' திரைப்படம் செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முதல் டி20 போட்டி 2 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி

முதலில் ஆடிய அயர்லாந்து 139 ரன்கள் எடுத்தது. அடுத்து ஆடிய இந்திய அணி 47 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது.




இந்தியா, அயர்லாந்து அணிகள் மோதும் முதல் டி20 போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் பும்ரா பவுலிங் தேர்வு செய்தார். அதன்படி முதலில் ஆடிய அயர்லாந்து அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 139 ரன்களை சேர்த்தது. பாரி மெக்கார்தி அதிகபட்சமாக 51 ரன்கள் எடுத்தார். கேம்பர் 39 ரன்கள் எடுத்தார். இந்தியா சார்பில் ஜஸ்பிரித் பும்ரா, பிரசித் கிருஷ்ணா, ரவி பிஷ்னோய் 2 விக்கெட் கைப்பற்றினர். இதையடுத்து 140 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது. ஜெய்ஸ்வால் 24 ரன்கள் எடுத்து அவுட்டானார். திலக் வர்மா டக் அவுட்டானார். ருதுராஜ் 19 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இந்திய அணி 6.5 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 47 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் டக்வொர்த் லீவிஸ் முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதன்படி இந்தியா 2 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: ஜோகோவிச், அல்காரஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்

சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. கடந்த 12ம் தேதி தொடங்கிய இத்தொடர், 20ம் தேதி வரை நடைபெறுகிறது. பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி போட்டிகள் நடந்தன. இதில் உலகின் நம்பர் 1 வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ், ஆஸ்திரேலியாவின் மெக்ஸ் பர்செலுடன் மோதினார். இதில் அல்காரஸ் முதல் செட்டை 46 என இழந்தார். இதையடுத்து சுதாரித்துக் கொண்ட அல்காரஸ் அடுத்த இரு செட்களை 63, 64 என வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். இதேபோல், உலகின் நம்பர் 2 வீரரான செர்பியாவின் ஜோகோவிச் அமெரிக்காவின் டெய்லர் பிரிட்சுடன் மோதினார். இதில் ஜோகோவிச் 60 64 என எளிதில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். இதேபோல், ஸ்வெரேவ், ஹர்காக்ஸ் ஆகியோரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

# மாமல்லபுரத்தில் சர்வதேச அலைச்சறுக்கு போட்டி நிறைவு முதலிடம் யார் தெரியுமா?



தமிழ்நாடு அலைசறுக்கு சங்கம் மற்றும் இந்திய அலைசறுக்கு கூட்டமைப்பு இணைந்து நடத்தும் சர்வதேச லீக் போட்டி மாமல்லபுரத்தில் கடந்த 12ம் தேதி துவங்கியது. இன்று அரையிறுதி மற்றும் இறுதி போட்டியுடன் நிறைவடைந்தது.

ஆண்கள் இறுதி போட்டியில் ஜப்பான் நாட்டை சேர்ந்த டென்ஷி இவாமி 16.30 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்தார். ஸ்வீடன் நாட்டை சேர்ந்த கியான் மார்ட்டின் 14.70 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தார். பெண்கள் இறுதி போட்டியில் ஜப்பான் நாட்டு வீராங்கனை சாரா வகிதா 13.50 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்தார். ஜப்பான் வீராங்கனை ஷினோ மட்சுடா 13.10 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தார். இளைஞர் நலன் விளையாட்டுத்துறை கூடுதல் தலைமை செயலர் அதுல்யா மிஸ்ரா, உறுப்பினர்செயலர் மேகநாதன், செங்கல்பட்டு கலெக்டர் ராகுல்நாத் ஆகியோர், வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகளை வழங்கினர்.





# மாஸ் காட்டிய இந்தியாவின் மெகுலி கோஷ்.. 2024 பாரிஸ் ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்று அசத்தல்

பாரிசில் நடைபெறும் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கு இந்தியாவை சேர்ந்த மெகுலி ஜோஷ் தகுதி பெற்று இருக்கிறார். அசர்பைஜானில் நடைபெற்ற 2023 ஐ.எஸ்.எஸ்.எஃப். உலக சாம்பியன்ஷிப் தொடரில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் மூன்றாவது இடம் பிடித்ததை அடுத்து ஜோஷ் ஒலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்று இருக்கிறார். மெகுலி ஜோஷ் ஒட்டுமொத்தமாக 229.8 புள்ளிகளை பெற்று வெண்கல பதக்கம் வென்றார். இவரை தொடர்ந்து இந்தியாவின் திலோத்தமா 208.4 புள்ளிகளுடன் நான்காவது இடம் பிடித்துள்ளார். சீனாவை சேர்ந்த ஜியாவு ஹான் மற்றும் ஜிஹ்லின் ஹாங் ஆகியோர் முதல் இரண்டு இடங்களை பிடித்தனர்.

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு தகுதி பெறுவதற்கு ஐ.எஸ்.எஸ்.எஃப். உலக சாம்பியன்ஷிப் 2023 போட்டிகள் நடைபெறுகின்றன. இந்த போட்டிகளில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் வீரர்கள் ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்கான வாய்ப்பை பெற முடியும். மெகுலி ஜோஷ் தகுதி பெற்று இருக்கும் போதிலும், தேசிய ஒலிம்பிக் கமிட்டி தான் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்போருக்கு அனுமதி அளிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை ஐ.எஸ்.எஸ்.எஃப். உலக சாம்பியன்ஷிப் தொடரில் இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெண்கல பதக்கங்களை வென்று இருக்கிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.எஸ்.எஸ்.எஃப். போட்டிகளில் தற்போதைய உலக சாம்பியனான ருத்ரான்ஷ் பாலாசாஹெப் பாடில் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவிலும், ஸ்வப்நில் குசேல் 50 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் ஒலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.